DISTRICT MUNSIF COURT, UTHAMAPALAYAM

Present : Thiru. A. Saravana Senthil Kumar, B.Com., B.L.,
District Munsif, Uthamapalayam.

**O.S.No: 183/2022**

**(CNR.No: TNTH06-000647-2022)**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயராம் | Religion | : |
| Father's Name | : | Occupation | : |
| Caste | : | Place | : |
| Age | : | **PW1** | |

---

நாள் :21.07.2023

**குறுக்கு விசாரணை**

செல்லம்மாள், கர்ணா எனக்கு என்ன உறவு என்றால் செல்லம்மாள் எனது அத்தை, கர்ணா எனது சித்தப்பா. செல்லம்மாள், கர்ணா ஆகியோர்களின் இறப்பு தேதிபற்றி எனது வழக்கில் கூறிக்கொள்ளவில்லை என்றால் சரிதான். எனது ராமுகவுடர், மாரியம்மாள் எந்த தேதியில் இறந்தார்கள் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரிதான். எனது சித்தாப்பா கிருஷ்ணசாமிக்கு இரண்டு தாரம் என்றால் சரிதான். எனது சித்தாப்பா கிருஷ்ணசாமியின் முதல் மனைவியின் பெயர் என்ன என்றால் வீரமணியம்மாள். எனது சித்தாப்பா கிருஷ்ணசாமியின் இரண்டாவது மனைவியின் பெயர் என்ன என்றால் செல்வம் அம்மாள். ரமேஷ் யாருடைய மகன் என்றால் கிருஷ்ணசாமி–செல்வம் அம்மாள் ஆகியோரின் மகன். கிருஷ்ணசாமி, வீரமணியம்மாள் எந்த தேதியில் இறந்தார்கள் என்று குறிப்பிட்டு கூறக்கொள்ளவில்லை என்றால் சரிதான். எனது பிராதில் 1ம் பிரதிவாதி நந்தினி வேறு நபரை திருமணம் செய்துகொண்டதாக கூறியுள்ளேன், ஆனால் யாரை திருமணம் செய்து கொண்டார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரிதான். ரமேஷ்க்கும், நந்தினி க்கும் குழந்தைகள் உள்ளார்களா என்று எனது பிராதில் குறிப்பிட்டு கூறவில்லை என்று சொன்னால் சரிதான்.

ரமேஷ்க்கு எந்த தேதியில் திருமணம் ஆனது என்று குறிப்பிட்ட கூறவில்லை என்று சொன்னால் சரிதான். நான் இறந்து விட்ட கிருஷ்ணசாமியின் வாரிசு என்று விளம்புகை செய்யக்கோரிதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இறந்துவிட்ட கிருஷ்ணசாமி எனது தகப்பனாரின் சகோதரர் என்றால் சரிதான். நான் இறந்துவிட்ட கிருஷ்ணசாமியின் நேரடி வாரிசு இல்லை என்பதால் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ள 2ம் பிரதிவாதியால் குறிப்பாணை கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

(ஒ.ம்) A. சரவணசெந்தில்குமார், B.Com., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
உத்தமபாளையம்.